DEPOSITION OF WITNESS

IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, THENI.

**M.C.O.P.No.154/2024**

Deposition of Witness : RW1 - (3ம் எதிர்மனுதாரர் தரப்பு)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | அருண்பிரசாத். | Father's Name | : | |
| Village | : | | Taluk | : | |
| Caste | : | | Calling | : | |
| Religion | : | | Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act No.44 of 1969 of the day of 09.02.2026

---

சாட்சி இன்று அழைக்கப்பட்டு Ms.S.Shanthi (Examiner) அவர்களால் உள்ளார்ந்த உறுதி உரை செய்யப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

முதல் விசாரணை– தொடங்கப்பட்ட நேரம் : 02.44 பி.ப

நான் இம்மனுவின் 3ம் எதிரமனுதாரர் தரப்பு 1ம் சாட்சி ஆவேன். நான் இன்று நீதிமன்றத்தில் எனது எழுத்துமூலமான நிரூபண வாக்குமூலத்தை தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகள் அனைத்தும் என்னால் சொல்லப்பட்டவைகள் தான். அதில் உள்ள கையொப்பங்கள் என்னுடையது தான்.

நான் என் தரப்பில் நிரூபண வாக்குமூலத்தில் சொல்லப்பட்டுள்ள ஆவணங்களை தாக்கல் செய்கிறேன். அந்த ஆவணங்கள் **எ.ம.சா.ஆ.1** முதல் **எ.ம.சா.ஆ.3** வரை குறியீடு செய்யப்படுகிறது. 3ம் எதிர்மனுதாரரை பொறுத்து மனு தள்ளுபடி செய்ய வேண்டுகிறேன்

**1,2 எதிர்மனுதாரர்கள் தோன்றாதரப்பினர்**

SARAVANAKUMAR.G.N

Digitally signed by SARAVANAKUMAR.G.N
Date: 2026.02.09 15:02:09 +0530

<u>மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:</u>

எனக்கு விபத்து பற்றி நேரடியாக தெரியாது என்றும் ஆவணத்தின் அடிப்படையில்தான் சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரிதான். விபத்து சம்பந்தமாக 2ம் எதிர்மனுதாரர் மீது குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். 2ம் எதிர்மனுதாரர் சாலை விதிகளை கடைபிடித்து மெதுவாக சென்றிருந்தால் விபத்து ஏற்பட்டிருக்காது என்றால் சரியல்ல. இந்த விபத்து 2ம் எதிர்மனுதாரரின் கவனக்குறைவால்தான் நடந்தது என்றால் சரியல்ல. 2ம் எதிர்மனுதாரருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்று சொல்வதற்கு எந்த மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகத்தில் ஓட்டுநர் உரிமம் இல்லை என்பதை சரி பார்த்தேன் என்று நீதிமன்றத்தில் ஆவணம் மூலமாக தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான் தேவைப்படும்பொழுது தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். 1, 2 எதிர்மனுதாரர்களுக்கு அறிவிப்பு அனுப்பியதாக கூறுவது சட்டப்படி ஏற்புடையதல்ல என்றால் சரியல்ல. விபத்து காலத்தில் காப்பீடு நடைமுறையில் இருந்தது என்றால் சரிதான். இவ்விபத்தில் எவ்வித காப்பீடு விதிமீறலும் இல்லை என்றால் சரியல்ல. 2ம் எதிர்மனுதாரருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்ற காரணத்தினால் எங்கள் காப்பீட்டு நிறுவனம் மனுதாரருக்கு இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் என்று கூறுவது ஏற்புடையதல்ல என்றால் சரியல்ல. காப்பீட்டு பிரிமீயமானது முழுத்தொகையும் பெற்றப்பின்தான் காப்பீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். காப்பீட்டினை பொறுத்து இறந்த நபர் 3ம் தரப்பினர் என்றால் சரிதான்.

விசாரணை முடிக்கப்பட்ட நேரம் : 02.52 பி.ப

*Taken down by me/before me in open Court interpreted read over to the witness and admitted by the deponent to be correct.*

SARAVANAKUMAR.G.N

Digitally signed by SARAVANAKUMAR.G.N
Date: 2026.02.09 15:02:12 +0530

Motor Accident Claims Tribunal
(Chief Judicial Magistrate Court)
Theni.
Date: 09.02.2026